* 151 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the percentage of population directly benefited by the fair price shops;

(*b*) why prices of foodgrains have been varying from time to time even after the opening of the fair price shops; and

(*c*) whether agriculturists are in any way adversely affected by the opening of fair price shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About 4·2 per cent of the population in this State is directly benefited by the fair price shops.

(*b*) The variations in prices of paddy and rice are due to inadequate supplies of Government rice to fair price shops to meet the needs of the public, hoarding of stocks by merchants and producers expecting higher prices, unrestricted movement of large stocks of rice to places outside the State and local seasonal conditions.

(*c*) The agriculturists are not adversely affected by the opening of fair price shops, as the open market prices of paddy and rice are generally higher than the controlled prices in the fair price shops.

MR. SPEAKER : I shall give sufficient time to hon. Members to ask supplementary questions. Hon. Members need not be afraid of it.

SRI N. K. PALANISAMI : அறுவடைக்குப் பிறகும் தான்யத்தின் விலை இறங்கவில்லை. அப்படி இறங்காமல் விலை ஏறி இருக்கும் சமயத்தில் அரசாங்கம் இவ்வாறு எல்லா இடங்களிலும் உள்ள நியாயவிலை கடைகளை மூடுவதற்கு உத்திரவிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இந்த நியாய விலைக் கடைகளை ஏன் நிரந்தரமாகச் செய்ய யோசிக்கக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது உணவு உற்பத்தி அதிகமாக இருப்பதால் அரிசியின் விலை மிகவும் குறைந்திருக்கிறது. இப்பொழுது பொது மக்களுக்கு ஏராளமான அரிசி கிடைக்கிறது. வரண்ட பிரதேசமாகிய சேலத்திலும் வட ஆற்காட்டிலும் கூட இப்பொழுது இந்த நியாயவிலை கடைகளுக்கு அவசியம் இல்லை. அறுவடைக்காலத்திற்குப் பிறகு அரிசி கிடைப்பதில் ஒருவிதமான கஷ்டமும் கிடையாது. ஆகவே நியாய விலைக் கடைகளை நிரந்திரமாக ஏற்படுத்துவதற்கு அவசியம் இல்லை.

SRI S. LAZAR : கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து நியாயவிலைக் கடைகளினால் பலன் பெறுகிறவர்கள் ஜனத்தொகையில் 100-க்கு 4.2 தான் என்று தெரிகிறது. ஆனால் இந்நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் 100-க்கு 75 பேர்கள் இருக்கிறார்கள். ஆதலால் இந்த நியாயவிலைக் கடைகள் அத்தியாவசியம் என்று சர்க்கார் உணர்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்கள் அங்கத்தினர் கேள்வி கேட்க ஆதாரமாக இருக்கிறது. அவரும் அதை ஒப்புக்கொண்டுதான் தெரிவித்தார்.

15th February 1958]

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமான நெல் உற்பத்தியானாலும், அது மற்ற ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுவதால், கார்த்திகை, மார்கழி மாதங்களில் அந்த ஜில்லாவில் அரிசித் தட்டு ஏற்படுகிறது. ஆகையால் அவசியமான காலங்களில் அந்த ஜில்லாவிலும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சை ஜில்லாவில் நெல் போதுமான அளவு உற்பத்தியாகி வருகிறது. அதன் காரணமாக அங்கிருந்து ஓரளவு நெல் மற்ற பிராந்தியங்களுக்கும் ஜில்லாக்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டாலும், அங்கே அரிசிக்குத் தட்டு இல்லை. அனேகமாக மக்கள் எல்லோரும் நியாய விலைக் கடைகளை நம்பியிருக்கவில்லை. ஆகையால் தஞ்சை ஜில்லாவுக்கும் நியாயவிலைக் கடைகள் வேண்டுமென்று இப்போதே கோருவது அவ்வளவு நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : 20,000 டன் அரிசியை வாங்கி மத்திய சர்க்காருக்கு ஏன் கொடுக்க வேண்டும் ? மத்திய சர்க்காருக்கு லட்சக்கணக்கான டன் அரிசியைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய ராஜ்யங்களே திருப்பிக் கொடுக்காமல் இருக்கும்போது, நாம் ஏன் திருப்பிக்கொடுக்க வேண்டும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கணக்கில் திருப்பிக்கொடுக்க வேண்டிய பிரச்னை இல்லை. முன்பு மத்திய சர்க்கார், தங்களிடம் கையிருப்பு இல்லாததால் இங்கிருந்த நியாய விலைக் கடைகளை மூடிவிட வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அவைகளை இன்னும் இரண்டு-மூன்று மாதங்களுக்கு நீடித்துவைத்திருக்க வேண்டுமென்று நாங்கள் அவர்களிடம் வற்புறுத்தினோம். அப்படி வற்புறுத்திப் பேசியபோது, இவர்களிடம் போதுமான அளவு அரிசி ஸ்டாக் இல்லையென்றால் நியாய விலைக் கடைகளுக்கு வேண்டிய அரிசியை இங்கேயிருந்தே வாங்கிக்கொடுக்கிறோம் என்றும், அந்த வகையில் கொடுக்கமுடியாமற்போன அரிசியை இந்த ராஜ்யத்திலிருந்து வாங்கி பர்த்தி செய்கிறோம் என்றும் சொன்னோம். அந்த வகையில்தான் திருப்பிக்கொடுக்க வேண்டிய பிரச்னை ஏற்பட்டிருக்கிறது.

SRI V. K. KRISHNAMOORTHI : வட ஆற்காடு ஜில்லாவில் ஆறு இருந்தும் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஜில்லாவில் நியாயவிலைக் கடைகள் இல்லை. மற்ற ஜில்லாக்களில் நியாயவிலைக் கடைகள் இருந்துவரும்போது, வட ஆற்காடு ஜில்லாவில் 1957-ம் வருஷத்திலிருந்து நியாய விலைக்கடைகள் மூடப்பட்டிருக்க வேண்டியது அவசியம் இல்லை. அங்கே படி 14 அணவுக்கு விற்றுவந்த அரிசி இப்போது 15 அணவுக்கு விற்பதால், அங்கே நியாயவிலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நியாயவிலைக் கடைகள் இருப்பதை ஒரு பெருமையாகவோ, அவை இல்லாததை ஒரு குறையாகவோ கருதக்கூடாது. வட ஆற்காடு ஜில்லாவில் நியாயவிலைக் கடைகள் அவசியம் என்று வற்புறுத்தப்படவில்லை. அங்கே நியாயவிலைக் கடைகள் இல்லாமலே நிலைமை சமாளிக்கப்படுகிறது. அதோடு நியாய விலைக் கடைகளால் ஒரு சிறு பகுதியினர்தான் பலனடைந்து வருகிறார்கள் என்று நான் முன்பே சொன்னேன்.

SRI A. V. P. ASAITHAMBI : அரிசியின் விலை ஏறியிருக்கக்கூடிய நிலையில் நியாயவிலைக் கடைகளை நிரந்தரமாக நீடிப்பதால் சகலருக்கும் அரிசி நியாயமான விலைக்கு நிரந்தரமாகக் கிடைக்குமாதலால், அவைகளை நிரந்தரமாக நீடிப்பதில் சர்க்காருக்கு என்ன சிரமம் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசியை நிரந்தரமாக நியாயவிலைக்குக் கொடுக்கிறோம் என்று சொல்வது ஏதோ தர்மம் செய்வதுபோல் இருக்கும். அது நம் சுயமரியாதைக்கு உகந்தது அல்ல.

[15th February 1958

SRI K. S. SUBRAMANIA GOUNDER : சேலம் வறண்ட பிரதேசமாக இருந்தபோதிலும், அங்கே மழை பெய்யாத போதிலும், அந்த ஜில்லாக் கலெக்டர் அங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று வற்புறுத்தியபோதிலும், அங்கே அவைகளைத் திறக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சமீபத்தில் கூட சேலம் ஜில்லாக் கலெக்டருடனும் வட ஆற்காடு ஜில்லாக் கலெக்டருடனும் நியாய விலைக் கடைகள் சம்பந்தமாக விசாரித்தேன். அங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டிய அவசியம் இப்போது இல்லை என்று அவர்கள் சொன்னார்கள்.

SRI P. S. CHINNADURAI : தென் மண்டலத்தில், உணவு தானியங்களை பலர் கள்ளத்தனமாகப் பதுக்கிவைப்பதன் காரணமாகவே அவைகளின் விலை உயருகின்றன என்று நேற்றைக்கு முன்தினம் மத்திய அரசாங்க உதவி அமைச்சர் ஒருவர் கூறியது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? வந்திருந்தால், இந்த அரசாங்கம் அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நேற்றைக்கு முன்தினம் மத்திய அரசாங்க உதவி அமைச்சர் ஒருவர் அவ்வாறு சொன்னதை நான் கவனிக்கவில்லை ; அது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை. ஆனால், இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், உணவு தான்யங்களைப் பதுக்கிவைக்கும் நிலைமை இப்பொழுது இல்லை என்று சொல்வேன்.

SRI A. A. RASHEED : Do the Government propose to purchase rice in the open market and stock it for the lean months?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This Government have no such proposal.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்காரிடம் போதிய அளவு அரிசி ஸ்டாக் இல்லை ; மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களிலுள்ள பஞ்சத்தைப் போக்குவதற்குக் கூட போதிய அளவு அரிசியை அவர்கள் வினியோகிக்க முடியவில்லை. ஆகவே ராஜ்ய சர்க்காரே ஸ்டாக் வைத்துக்கொண்டு, இங்கே நெருக்கடி ஏற்படும்போது நியாய விலைக் கடைகளுக்கு வினியோகிப்பதற்கு ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்டாக் வைத்துக் கொண்டு அவசியமான காலங்களில் கொடுக்கும் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்களிடமிருந்து நாம் வாங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

SRI R. SRINIVASA IYER : Since it is known that there is a large amount of export of rice out of the Andhra State and out of the Southern Zone and also from the Madras State to other States outside the Southern Zone, will the Government take steps in the next meeting of the Zonal Council to prevent the export of rice from Madras State to other States within and outside the Southern Zone by road also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The very idea of forming this Zone is that there must be free movement of foodgrains

15th February 1958]

within the zone. Therefore, we cannot ask for complete restriction on the movement of foodgrains from out of one State.

Sri P. S. SANTHANAM : நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களிலிருந்து தங்களுக்கு வரும் தானியங்களை அப்போதைக்கப்போது விற்காமல் பதுக்கிவைத்துக்கொண்டிருப்பதால்தான் அவைகளுடைய விலைகள் ஏறுகின்றன. விலைகள் ஏறவேண்டுமென்று அவர்கள் பதுக்கிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு, அவர்கள் வாங்கக்கூடிய விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக பதுக்கிவைக்கும் விவசாயிகளிடமிருந்து அதை வெளியில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், இங்கே பதுக்கல் இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படிப் பதுக்கல் ஏற்பட்டால், சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்.

Sri A. R. SUBBIAH MUDALIAR : தஞ்சை ஜில்லாவில் பயிர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதால், உணவு தானிய உற்பத்தியில் 1/7 பங்கு குறைந்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தஞ்சையைப்பற்றி கனம் அங்கத்தினர் அவ்வளவு குறைவாக நினைக்கவேண்டாம். எங்கும் நோய் இருக்கிறது. மனிதர்களுக்கு நோய் இருப்பதை எனது சக அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்துவருகிறார்கள். இதேமாதிரி பயிர்களுக்கு உள்ள நோயும் கவனிக்கப்பட்டு, அது தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே பயிர்களுக்குள்ள நோயைக் குறித்து கனம் அங்கத்தினர் பயங்கரமான அபிப்பிராயம் கொள்ள வேண்டாம்.

Dearness Allowance to N.G.Os.

* 5 *S.N.Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Madras Civil Services Joint Council has made any representations to the Government recently to the effect that the dearness allowance of Non-Gazetted Officers may be raised by Rs. 5 with effect from 1st April 1957?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Council has recommended for the consideration of the Government the immediate sanction of an increase of Rs. 5 in the dearness allowance to the Non-Gazetted Government Officers with effect from 1st April 1957.

Sri N. K. PALANISAMI : இந்தக் கவுன்சிலில் நிதி இலாகாக் காரியதரிசியும் இருப்பதன் காரணமாக இந்த ராஜ்யத்தின் நிதி நிலைமையை அனுசரித்தே சிபாரிசு செய்யப்பட்டிருப்பதால், உடனடியாக இந்த உத்தியோகஸ்தர்களுக்கு அதிக அலவன்ஸ் கொடுப்பதற்காக, அது சம்பந்தமாக சிபாரிசு செய்வதற்காக ஒரு சிறு கமிஷனை நியமிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தக் கவுன்சிலில் நிதி இலாகாக் காரியதரிசியும் இருப்பதன் காரணமாக இந்த ராஜ்யத்தின் நிதி நிலைமையை அனுசரித்தே சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது. அவசியத்தையொட்டி கவுன்சில் சிபாரிசு செய்திருக்கிறது. இந்த உத்தியோகஸ்தர்களுக்கு அலவன்ஸை நாம் நமக்கு இருக்கும் நிதி வசதிகளை அனுசரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது.